அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு மாசி - பங்குனி மார்ச் 2018 முரசு 11 ஒலி 129



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# ஜீவகாருண்யம்

ஜீவகாருண்ய ஒழுக்கம் உடையவர்களாகி ஜீவர்களைப் பசி என்கின்ற அபாயத்தில் நின்றும் நீங்கச்செய்கின்ற உத்தமர்கள்... தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையவர் ஆவார்களென்று அறியப்படும். - வள்ளல் பெருமானார்

## தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

1) காலை உணவிற்கு ---------- ரூ. 2,500/-
2) மதிய உணவிற்கு ---------- ரூ. 6,500/-
3) இரவு உணவிற்கு ---------- ரூ. 3,500/-
4) பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு ---------- ரூ. 5,000/-
5) பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு ஒரு மாதத்திற்கு) --- ரூ. 2,500/-
6) அணையா தீபத்திற்கு எண்ணெய் (5 இடங்களுக்கு) --- 15 லிட்டர்

தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்



**Please donate - Cheque / DD**
**in favour of**
Arutperunjothi Vallalar Charitable Trust,
Thiruvannamalai

**Please donate through:**

**Bank: HDFC Bank Ltd.,**

**Name: Arutperunjothi Vallalar Charitable Trust, Branch: Thiruvannamalai,**

**A/c No.: 08761450000048, IFSC Code: HDFC0000876**


**அருள்திரு பாபு சாது**
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை
கோசாலை vill, அடிஅண்ணாமலை Po,
திருவண்ணாமலை - 606 604.
தொடர்புக்கு:
+91 94434 89849, +91 99427 76351.




அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு: +91 94874 54688



# திருச்செவிக்கு விண்ணப்பம்

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராத வண்ணஞ் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்றுவித்தருளல் வேண்டும். சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே! அத்திருவலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத்திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியர்களாக்கி உண்மை அறிவை விளக்கி உண்மை இன்பத்தை அளித்துச் சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை அடைவித்து நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

மனிதகுல வாழ்விற்கு மகான்கள் அருளிய

# ஜீவதர்மம்

**ந**ம்முள் எப்போதும் ஒரு கேள்வி இருந்துகொண்டிருக்கிறது. ஒரு மனிதன் கடவுளின் நல்லதொரு பக்தனாக வாழ நினைத்தாலும் முடிவதில்லை. உலகியல் வாழ்வும் நினைத்தபடி வாழ முடிவதில்லை. சரி, உலகியல் வாழ்வையும் ஆன்மீக வாழ்வையும் சமநிலையில் ஏற்று வாழலாம் என்றால் அதுவும் முடிவதில்லை. அப்போது யார் இவற்றை முடிவு செய்வது?

கடவுளா என்றால், 'கடவுள் சர்வ ஜீவ தயாபரன்; சர்வ வல்லமையுடையவன்'. அப்படியிருக்க அவர் நினைத்தால் ஒரு கணத்தில் எல்லா ஜீவர்களின் வாட்டத்தையும் நீக்கி, சித்தி முத்தி அனுபவங்களைக் கொடுத்து தன் பாதாரவிந்தங்களில் சேர்த்துக் கொள்ளக்கூடும். ஏன் நம்மை உலக மாயையில் சிக்கித் தவிக்கவிட வேண்டும்?

பிறகு கடவுள் முடிவெடுப்பதில்லை எனில் யார் முடிவெடுப்பது? 'நானே முடிவு செய்கின்றேனோ?' நான் முடிவு செய்கின்றேன் என்றால் நான் நினைத்தபடி என் வாழ்வை நடத்த முடிவதில்லையே.

நானும் முடிவெடுப்பதில்லை, கடவுளும் முடிவு செய்வதில்லை எனில் விதியாக இருக்குமோவென்றால், இங்கு மற்றொரு கேள்விக்கு விடை காண வேண்டும். விதி என்பது சத்துப் பொருளா? அசத்துப் பொருளா? அது அசத்துப் பொருள். அறிவற்ற பொருள் நம்முடைய பாதையை தீர்மானிக்க முடியாது.

சரி காலம் நிர்ணயிக்கிறது என வைத்துக் கொள்வோம். உதாரணமாக, நாம் நல்லதொரு வேலை வாய்ப்பிற்காக முயற்சி செய்துகொண்டிருப்போம். பலநாள் முயன்றும் கிடைக்காதது திடீரென ஒருநாள் கிடைத்துவிடும். இப்போது நாம் என்ன சொல்வோம்? காலம் கனிந்தது எனச் சொல்வோம். ஆனால் இது நாம் முயன்றதால் நடந்ததா? இல்லை எதார்த்தமாக நடந்ததா? காலம் என்றால் அது எப்போதும் உள்ளது. நேற்று நடந்திருக்கலாம், ஒருமாதத்திற்கு முன்புகூட நடந்திருக்கலாம் இல்லையென்றால் ஒருமாதம் கடந்தும் நடந்திருக்கலாம். அப்படி ஏதும் நடக்கவில்லை. இதைக் கொண்டு பார்க்கும்போது காலமும் இல்லை என்பது புலனாகிறது.

பிறகு நம் அனுபவங்களுக்கு எதுதான் காரணமாக இருக்கின்றது?

இப்பிரபஞ்சத்தில் கடவுள், உயிர், உலகம் என்ற மூன்று மெய்ப் பொருட்களில் இரண்டு அறிவுப் பொருள். ஒன்று அறிவற்றது.

இவ்வுலகில் பார்ப்பது, கேட்பது, முகர்வது, ருசிப்பது, உணர்வது இதற்கு உதவும் கருவிகளாகிய கண், காது, மூக்கு, வாய், மெய் இவையும் கை, கால் முதலியவையும் மனம், புத்தி முதலிய அந்தக்கரணங்களும் ஜடப் பொருட்களே. ஜீவான்மா மட்டுமே அறிவுப் பொருள். இதன்றி பரமான்மாவும் அறிவுப் பொருள்.

ஆக முடிவெடுப்பதற்கான ஆற்றல் ஜீவான்மாவிற்கு இருக்க வேண்டும் அல்லது பரமான்மாவிற்கு இருக்க வேண்டும். ஜடப் பொருட்கள் நமது பாதையை முடிவு செய்ய முடியாது.

பொதுவாக இரண்டு விஷயங்கள் உண்டு. அதாவது, முடிவெடுப்பவர் ஒருவரும் அதை செயலாக்கம் செய்பவர் ஒருவரும் இருக்க வேண்டும். இங்கு மற்றொரு கேள்விக்கு நாம் விடை காண வேண்டும். யார் முடிவெடுப்பவர்? யார் செயலாற்றுபவர்?

ஒரு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் முடிவெடுப்பார். தனக்கு கீழே வேலை செய்வோர் அதைச் செயல்படுத்த வேண்டும் என எதிர்பார்ப்பார்.

எப்போதும் முடிவெடுப்பவருக்கும், செயல்படுத்துவோருக்கும் இடையே ஓர் பரஸ்பர உணர்வு இருக்க வேண்டும். அப்போதுதான் செயல்பாடு நன்றாக இருக்கும். இரண்டு பக்கமும் பலன் கிடைக்கும். இல்லையாகில் நஷ்டமே விளையும்.

இங்கு கடவுள் முடிவெடுத்து அவரே செயல்படுத்துபவரா? கடவுள் முடிவெடுத்து நாம் செய்கிறோமா? அல்லது நாம் முடிவெடுத்து கடவுள் செய்கிறாரா? நாம் முடிவெடுத்து நாமே செய்கிறோமா? இந்த நான்கு சாத்தியக் கூறுகள்தான் உள்ளன.

கடவுள் முடிவெடுத்து அவரே செயல்படுபவராக இருந்தால் இங்கு ஜீவனுக்கு எந்த அனுபவமும் இல்லை. எனவே இந்தக் கூற்று தவறானது.

கடவுள் முடிவெடுத்து நாம் செய்கிறோம் என்றால், இந்த உலகில் நடைபெறும் எல்லா அநீதிகளுக்கும் கடவுள் காரண கர்த்தா என்றாகிவிடும். ஆனால் எப்போதும் கடவுள் குற்றம் செய்வதில்லை. ஆக இதுவும் தவறானது.

பிறகு நாம் முடிவெடுத்து கடவுள் செய்கிறாரா? இது சாத்தியமே இல்லை என்பது சிறு குழந்தைகளும் அறியும்.

ஆக இறுதியாக ஒரு சாத்தியக்கூறுதான் உள்ளது. நாம் முடிவெடுத்து நாமே செய்வது. இதுதான் உண்மை. ஏனென்றால் எல்லா குருமார்களும் தோன்றியது ஜீவர்களுக்காகவே. அவர்கள் மூலம் உருவான எல்லா அறநூல்களும் ஜீவர்கள் உய்வடையும் பொருட்டே. இந்தக் கூற்றும் தவறென்றால் ஞானிகளும், அறநூல்களும் தோன்றியதற்கு பயனே இல்லாதுபோகும்.

அப்படியானால் நாம் நினைத்தபடி நம்மால் வாழ முடிவதில்லையே என்ற ஐயப்பாடு மீண்டும் எழுகிறது. நாம் நினைத்து நாமே செய்கிறோம் என்றால் கடவுளின் பங்கு என்னவென்ற கேள்வியும் இங்கு எழுகிறது. மேலும் நாம் நினைத்தபடி நம்மால் வாழ முடியாவிட்டால் முன்னரே எல்லாம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? என புதிதாக ஒரு கேள்வியும் எழுகிறது.

பொதுவாக 'தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்' என்ற பழமொழியை சொல்வார்கள். அதாவது இந்த வண்ணம் நடந்தால் நன்றாக இருக்கும் என நாம் நினைத்தால் கடவுள் வேறுவிதமாக நினைக்கிறார் என்கிறது இப்பழமொழி. இக்கண்ணோட்டம் தவறானது. ஏனென்றால் கடவுள் ஒன்று நினைக்க நாம்தான் வேறொன்று நினைக்கிறோம்.

காலம் காலமாக கடவுள், ஜீவர்கள் அனைவரும் மேல்நிலை எய்த வேண்டும் என்பதற்காக இச்சரீரத்தைக் கொடுத்து, அறிவைக் கொடுத்து, அனேக குருமார்களையும், ஞானிகளையும் அனுப்பி அற நூல்களை அளித்து ஜீவான்மாக்கள் அனைத்தும் பரமான்மாவாகிய தன்னை அடைய வேண்டும் என நினைக்கிறார். ஆனால் நாம்தான் இதை உணராது வாழ்கிறோம்.

நாம் யாரும் அந்த அற நூல்களை வாசிப்பதும் இல்லை, அதன்படி நடப்பதும் இல்லை, குருமார்களை மதிப்பதும் இல்லை.

மேலும் நாம் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு எந்தச் செயலும் நிர்ணயிக்கப்பட்டு நடப்பதல்ல. ஏனென்றால் நாம் செய்து முடித்த செயலுக்கும் (வினை) அதன் விளைவிற்கும் (பாவம், புண்ணியம்), அனுபவத்திற்குமான (இன்பம், துன்பம்) காரணங்கள் இங்கு இரண்டு வகையாகப் பிரிகின்றன. ஒன்று **தெரிந்த வினைக் காரணம்**, மற்றொன்று **பொது வினைக் காரணம்.**

ஒரு காரியத்திற்கு நேரடியான மற்றும் குறிப்பிட்ட காரணம் தெரிந்தால் அது தெரிந்த வினைக் காரணம்.

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் உண்டு. காரணமில்லாமல் காரியமில்லை. மேலும் காரணமும் காரியமும் செயல் கர்த்தாவிடமே இருக்கும். ஒருவர் மழையில் நனைவதால் மற்றொருவருக்கு ஜலதோஷம் பிடிக்காது. ஒருவர் மருந்து உண்பதால் மற்றொருவருக்கு குணமாகாது. ஆக காரணமும் அதற்கான விளைவும் செயல்புரிபவரிடமே இருக்கும்.

ஆனாலும் ஒவ்வொரு குறிப்பிட்ட காரியத்திற்கும் அதற்கு நேரடி சம்பந்தமான காரணத்தைக் கூற முடியாது.

எப்படியெனில், ஒரு கோயிலில் சத்சங்கம் நடைபெறுகின்றது. முந்நூறு நபர்கள் வந்துள்ளனர். இந்த காரியத்தை ஒரு குறிப்பிட்ட காரணத்திற்கு சம்பந்தபடுத்த முடியுமா? ஆம் என்றால், ஒவ்வொரு விளைவிற்கும் ஒரு குறிப்பிட்ட காரணம் உண்டு என்பது நியதி. அப்படியென்றால் இதில் பிழை ஏற்படுகின்றது. இந்த சத்சங்கத்திற்கு முந்நூறு நபர்கள் ஒன்றாகக் கூடியுள்ளனர். காரணமும் காரியமும் ஒரே நபரிடமே இருக்கும் என முன்னரே கண்டோம். இதற்கிணங்க இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் காரியம் ஒன்றுதான். அதாவது சத்சங்கத்தைக் கேட்டல். அப்படியிருக்க காரணமும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் இது சாத்தியமா? சுவாமியை தரிசிக்க வேண்டும் என வந்தவர்களும் இதில் கலந்திருக்கலாம். வேறு காரணத்திற்காக கோயில் பக்கமாக வந்தவர்களும் விளம்பரத்தைப் பார்த்து இங்கு வந்திருக்கலாம். ஆக இங்கு நடக்கும் இக்குறிப்பிட்ட காரியத்திற்குரிய நேரடியான குறிப்பிட்ட காரணம் தெரியாததால் இது பொது வினைக் காரணம்.

உதாரணமாக நிலம், நீர், உரம், ஏர், சூழ்நிலை முதலியவையும் விவசாயியும் பொது வினைக் காரணம். விதை என்பது மரம் வளர்வதற்கு தெரிந்த வினைக் காரணம்.

ஆக முன் சொன்னதுபோல் இந்த உலகில் ஒரு காரியத்திற்கு காரணங்கள் இரண்டு. ஒன்று **தெரிந்த வினைக் காரணம்.** மற்றொன்று **பொது வினைக் காரணம்.**

நாம் வினைகளின் காரணமாகத்தான் பிறந்திருக்கிறோம். இங்கு வினைகள் என்பது பொது வினைக் காரணம். இந்த வினைகளை நாம்தான் செய்திருக்கிறோம். ஒரு செயலும் அதற்கான விளைவும் செய்தவரிடமே இருக்கும் என்ற கூற்றிற்கு இணங்க இவ்வினைகளின் பயனை நாம்தான் அனுபவித்தாக வேண்டும். ஆனாலும் அப்படியல்ல.

நாம் ஒரு கேளிக்கைப் பூங்காவிற்குச் செல்கிறோம். நுழைவுக் கட்டணமாக ரூ. 250 வசூலிக்கப்படுகிறது. நுழைவுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே செல்கிறோம். இங்கு நுழைவுச் சீட்டு என்பது நாம் செய்த வினைகள். இது பொது வினைக் காரணம்.

மேலும், ஒரு நுழைவுச் சீட்டிற்கு பத்து கேளிக்கைகளில் பங்கு கொள்ளலாம் என கூறுகின்றனர். இதில் எந்த கேளிக்கை நிகழ்விலும் நாம் பங்குகொள்ளலாம். இங்கு நமக்கு ஒரு சுதந்திரம் அளிக்கப்படுகிறது. ஆனால், நாம் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு

கேளிக்கை நிகழ்விற்கும் நுழைவுச் சீட்டின் ஒரு குறிப்பிட்ட 25 ரூபாயை சம்பந்தப்படுத்த முடியாது. அதுபோல் பிறவிக்குக் காரணம் வினைகள்தான் என்றாலும் நம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விற்கும் ஒரு குறிப்பிட்ட வினையை சம்பந்தப்படுத்த முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

நம் வள்ளல் பெருமானார் இம்மனித தேகமெடுத்த ஜீவர்களுக்கு அற்ப சுதந்திரம் கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பார். எனவே மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட இந்த அற்ப சுதந்திரத்தைக் கொண்டும், அற்ப அறிவைக் கொண்டும் தனது பாதையை முடிவெடுத்து அதைச் செயல்படுத்தி மேலேற முடியும். வினைகளிலிருந்து விடுபட முடியும்.

ஆனால், இங்கு மற்றொரு கேள்வி எழுகிறது. என்னவெனில், இந்த அற்ப சுதந்திரத்திற்கு முன்வினைகளை அழிக்கக் கூடிய ஆற்றல் உண்டா, அத்தனை சக்தி வாய்ந்ததா என்றால் இல்லை என்றே விடை வருகிறது. ஆக குருமார்களையும் கொடுத்து, அவர்கள் மூலம் அறநூல்களையும் கொடுத்து, உயர் அறிவுடைய இம்மனித தேகத்தையும் கொடுத்து, அதில் அற்ப சுதந்திரத்தையும் கொடுத்து வினைகளை போக்கிக் கொள்ள முடியாது என்றால் இவற்றால் என்ன பயன்? இப்படி பார்க்கும்போது ஜீவனுக்கு சுதந்திரம் இல்லை என்பதுபோல் தோன்றலாம். இங்கு நாம் ஒன்றை கவனிக்க வேண்டும்.

கடவுள் நமக்கு அற்ப சுதந்திரத்தை அளித்துள்ளார் என்பது உண்மை. ஆனால் **இச்சுதந்திரத்தை, கடவுளைத் துணைக்கு அழைக்க பயன்படுத்த வேண்டும்.** ஏனென்றால் ஜீவன் சுதந்திரன் என்றாலும் அது பராதீனன் (ஒன்றைச் சார்ந்தே வாழும் இயல்பு) இத்தன்மையால் மாயையைச் சார்ந்து வாழும் ஜீவன் அற்ப சுதந்தரத்தைப் பயன்படுத்தி கடவுளைச் சார்ந்து வாழப் பழகவேண்டும். கடவுளின் அருளைக் கொண்டே வினைகளை நீக்கிக் கொள்ள முடியும்.

நாம் கடவுளை துணைக்கு அழைக்காதவரை அவர் படைப்பிற்கான பொது வினைக் காரணமாகத்தான் இருப்பார். நம் சுதந்திரத்தில் அவர் தலையிடுவதில்லை. அவர் துணையில்லாதபோது நாம் செய்த வினைகளும், செய்யும் வினைகளுமே நம்மை வழிநடத்தும். மேலும், எல்லா படைப்புகளும் கடவுளால் உருவாக்கப்பட்டது. இதற்குத் தலைவராக இறைவனே இருக்கிறார். அவர் நமக்குத் துணை வந்தால் வினைகளிலிருந்து விடுபடுவது எளிது.

எப்போது இறைவனை துணைக்கு அழைக்கிறோமோ அப்போதுதான் அவர் நம் வாழ்விற்குள் பங்கேற்று நமது வினைகள் நீங்க அருள்

செய்வார். ஆக இம்மனித தேகத்தில் அற்ப அறிவும், அற்ப சுதந்திரமும் கொடுக்கப்பட்டது இறைவனின் அருளைப் பெறுவதற்கே.

இதைத் அறிந்துகொண்ட பிறகு, எல்லாம் கடவுள் செயல் என்பதோ, எல்லாக் காரியங்களுக்கும் விதியை நொந்து கொள்வதென்பதோ அல்லது காரணங்களைத் தேடுவதென்பதோ, கண்மூடித்தனமான பரிகாரங்களைச் செய்ய ஜாதகத்தை கையில் எடுத்துக் கொண்டு செல்வதோ பயனற்ற செயல். இம்முயற்சிகள் நமக்கு கொடுக்கப்பட்ட வாழ்நாளை வீணடித்துவிடும்.

**"இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள். எல்லாப் பற்றுகளுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள் என்ற திருவார்த்தையதனால் கடவுளை தொழுவது ஒன்றே தொழிலாக உடையது கடமை"** என்ற வள்ளல் பெருமானாரின் வாக்கிற்கு இணங்க நமக்கு கொடுக்கப்பட்ட சிறிய சுதந்திரத்தைப் பயன்படுத்தி இறைவனைத் தொழுவதைக் கடமையாகக் கொண்டு, ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடித்து அருளை அடைந்து நம் எல்லா வினைகளிலிருந்தும் விடுபட்டு உய்வடைவோமாக.

---

# மூத்தோர் சொல் அமிர்தம்

**கி**ரிக்கெட் என்றால் ஏதோ பொழுது போகாதவர்கள் ஆடுகிற பொழுதே போகாதவர்கள் பார்க்கிற மட்டையடி என்று பலரும் கருதுகிறோம். ஆனால் அதற்குள் எத்தனை பெரிய வாழ்க்கை ரகசியம் பொதிந்திருக்கிறது தெரியுமா? கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள் கூறும் விளக்கத்தைக் காண்போம்.

கிரிக்கெட்டில் ஆடுகிறவர் ஒருவர். அவருக்கு ஓடிவந்து ரன் எடுக்க உதவுகிறவர் ஒருவர். சரியான உதவி இல்லாமல் யாரும் ஜெயிக்க முடியாது என்பது புரிகிறதா? அடுத்து ஆடுகிறவர் ஒருவர் என்றால் அவரை வீழ்த்துகிறவர் ஒருவர் இருக்கலாம். ஆனால் கிரிக்கெட்டில் அப்படியா? ஆடுகிறவரை வீழ்த்த; அழிக்க பதினோரு பேர். அதுதான் உலகம். நல்லது செய்ய இரண்டுபேர் புறப்பட்டால் அவர்களை வீழ்த்துவதற்கு பதினோரு பேர் தயாராக இருக்கிறார்கள். இதுதான் வாழ்க்கை. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். விளையாட்டிலேயே இரண்டுபேர் ஆட வீழ்த்துவதற்கு பதினோரு பேர் புரிகிறதா!

அதைவிட இந்த மக்கள் கூட்டம் செய்கின்ற செயல் அடேயப்பா Four, Sixer என்று ரன் எடுத்தாலும் கைதட்டும், ஆர்ப்பரிக்கும். வீழ்த்தப்பட்டாலும் ஆர்ப்பரிக்கும். மக்கள் மனசைப் புரிஞ்சுக்கவே முடியாதுடா சாமி! ரன்னுக்கு எப்படி விசில் இரைச்சல் ஆர்ப்பாட்டமோ அதேதான் வீழ்த்தப்படுவதற்கும். மக்கள் யார் பக்கம் எப்போது சாய்வார்கள் என்று புரிந்து கொள்ள முடியாது.

மக்களுக்கென்ன? ஜெயிச்சாலும் ஆர்ப்பாட்டம். தோற்றாலும் ஆர்ப்பாட்டம். இதுதான் மக்கள் இயல்பே. “வாழ்ந்தாலும் ஏசும். தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இது தானடா” என்கிற பாட்டு சரியான உண்மைதான் சாமி!

வின்ஸென்ட் சர்ச்சில் பேசப் போனார். பேச்சைக் கேட்க மக்கள் கூட்டம் அலை மோதியது. “உங்கள் பேச்சைக் கேட்க எவ்வளவு பெரிய கூட்டம் கூடுகிறது பார்த்தீர்களா” என்று உதவியாளர் ஐஸ் வைத்தார். உதட்டைப் பிதுக்கியபடி “ப்பூ... இதென்ன கூட்டம். என்னைத் தூக்கில் போடுவதாக இருந்தால் இதைவிடப் பெரிய கூட்டம் வரும்” என்றார் சர்ச்சில். மக்களைச் சரியாகவே எடைபோட்டிருக்கிறார்.

கிரிக்கெட் சொல்லும் கீதோபதேசம் இன்னும் இருக்கிறது. சில சமயங்களில் கூட்டம் எழுந்து அவுட் அவுட் என்று ஆர்ப்பரிக்கும். கோஷம் போடும் ஏன்? பேட்டில் பால் பட்டதா இல்லையா என்று சட்டென்று தீர்மானிக்க முடியாத குழப்பம். பந்து ஸ்டெம்ப்பில் படுமுன்னர் ஓடிவந்து மட்டையால் கோட்டைத் தொட்டாரா இல்லையா என்கிற சந்தேகம். இந்த மாதிரி நேரத்தில் **“தொக்குத் தொக்கு என்று குலுங்கியதாம்”** என்கிற பாரதி வரி போல கூட்டம் எழுந்து பேயாகக் குதிக்கும். விசில் விண்ணை முட்டும். ஆட்டக்காரன் தன் நியாயத்தை நிரூபிக்க முடியாமல் மட்டையை மண்ணில் ஊன்றியபடி பரிதாபமாக பலியாடு மாதிரி விழிப்பார்.

ஆனால் அம்ப்பயர் ஒற்றை மனிதர், நாட்அவுட் என்று அறிவித்ததும் பேயாட்டம் ஆடிய ரசிகப் பிசாசுகள் அடங்கி ஒடுங்கும். ஆச்சர்யமாக இல்லையா! பத்தாயிரம் பேர் முடிவுக்கு எதிராக ஒற்றை மனிதர் தீர்ப்புச் சொன்னதும் பேயாட்டம் காற்று போன பலூன் மாதிரி வடிகிறதே எப்படி?! அதுதான் தர்மத்தின் வலிமை! அதர்மம் அநீதி அக்கிரமம் எத்தனை பெருங்கூட்டம் கூடி காதுகிழிய கத்தினாலும் தர்மத்தின் மெல்லிய குரல் வலிமையானது. அதர்மத்தின் குரலை அடக்கும். அடேங்கப்பா கிரிக்கெட்டில் இத்தனை தத்துவமா? இன்னும் ஒன்று. முக்கியமான ஒன்று.

ஆடுகளத்தில் தர்மத்திற்காக ஆடுகிறவன்(Player) ஒருவன் என்றால் அவுட்டாக்க பதினோருபேர் என்று பார்த்தோம். ஒருசில சமயத்தில்

பதினோருபேர்கூட அவுட்டாக்க மாட்டார்கள். கூட ஒத்துழைக்கும் பேட்ஸ்மன் தேவையில்லாமல் நம்மை ஓடவிட்டு சிக்கலில் மாட்டிவிடுவார். ரன்அவுட் ஆகவைப்பார். இவ்வுலகிலும் சமயத்தில் எதிரிகளாலல்ல நம்மவர்களே நம் வீழ்ச்சிக்குக் காரணமாகக் கூடும். கிரிக்கெட் கூட ஒரு கீதோபதேசம் தான். கவனித்தால் புரியும்.

**உண்பனே எனினும் உடுப்பனே எனினும் உலகரை நம்பிலேன் எனது**
**நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.**

பரமஹம்சரிடம் ஒருவர் வந்தார். ஒரு கேள்வி கேட்டார். இவர் பதில் சொன்னார். பெரிய விஷயம். சிறிய உதாரணம்.

வந்தவர் "ஐயா நீங்கள் காளியைப் பார்த்திருக்கிறீர்களா?" எனக் கேட்டார். "ஓ, பார்த்திருக்கிறேனே! காலையில் கூட அவளிடம் பேசினேன்." பரமஹசம்சரின் பதில்.

"நீங்கள் பார்த்தது உண்மை என்றால் எனக்குக் காட்டுங்கள்." சுற்றி அமர்ந்திருந்தவர்கள் பரமஹம்சர் மாட்டிக் கொண்டார் என்று எண்ணி பரிதாபப்பட்டனர். பரமஹம்சர் தெளிவானவர். அவர் கவலையே படவில்லை. வந்தவரிடம் கேட்டார்.

"நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள்?" என பரமஹம்சர் கேட்டார்.

"நான் டாக்டர் வேலை செய்கிறேன்" வந்தவர் சொன்னார்.

இப்போது பரமஹம்சர் "அப்படியானால் டாக்டர் தொழில் நன்றாகத் தெரியும் தானே?" எனக் கேட்க "நன்றாகத் தெரியும்" என்றார் வந்தவர்.

"அப்படியானால் என்னை ஒரு டாக்டராக ஆக்குங்களேன்" என்றார் பரமஹம்சர்.

அதற்கு வந்தவர், "அது எப்படி? நீங்கள் டாக்டருக்குப் படிக்க வேண்டுமே?" என்றார்.

"டாக்டராவதற்கே ஒரு படிப்பு வேண்டும் என்றால், கடவுளைப் பார்க்க ஒரு படிப்பு வேண்டாமா? நான் அதைப் படித்திருக்கிறேன். நீங்களும் அதைப் படித்தால் கடவுளைக் காணலாம்" என்றார்.

**கு-என்னும் அசுத்த நிலையில் உள்ளோரை ரு-என்னும் அருள் நிலையில் தாம் நின்ற வண்ணம் நிறுத்துகின்றவரே குரு ஆவார்.**

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# பக்தியின் படிநிலை

அன்பர்களே! நாம் அனைவரும் மன அமைதி பெற்று ஆனந்தமாக வாழவே விரும்புகிறோம். அதற்காக அநேக சாதனை முறைகளைப் பின்பற்றுகிறோம். ஆனாலும் சிலபல நேரங்களில் மன சஞ்சலத்தால் தவிக்கின்றோம். இதிலிருந்து விடுபடுவதற்கு என்ன வழி என்பதையே இங்கு காணவிருக்கிறோம்.

தியானம் செய்ய நினைத்த ஒரு இளைஞன் கோயிலுக்குச் செல்கிறான். அங்கு ஒரு அழகிய பெண்ணின் மீது அவன் கவனம் திரும்பியது. பிறகு எப்படி தியானம் செய்வது? அவன் மனம் அப்பெண்ணின் நினைவில் சிக்கிக் கொண்டது. எனவே தியானம் செய்யாமல் அவ்விடத்தைவிட்டு சென்றுவிட்டான். மறுநாள் கோயிலுக்குள் சென்று கண்ணை கட்டிக் கொண்டு தியானம் செய்ய முற்பட்டான். அந்த சமயம் அவன் காதுகளில் கொலுசொலி கேட்டது. உடனே அவன் மனதில் “இது நேற்று வந்த அந்த பெண்ணோ” என்ற நினைவு வந்துவிட்டது. அதன் பிறகு அவனால் தியானத்தில் அமர முடியவில்லை.

மறுநாள் அவன் கோயிலின் உள்ளே கண்ணையும் காதையும் கட்டிக் கொண்டு தியானத்தில் அமர்ந்தான். சற்று நேரத்தில் மல்லிகைப் பூ மணம் அவன் மூக்கை துளைத்தது. பிறகு சொல்லவும் வேண்டுமோ. அவன் மனம் அவனை பாடாய் படுத்தியது. விரக்தியில் அவ்விடம் விட்டு அகன்றான். அடுத்தநாள் கண், காது, மூக்கு என அனைத்தையும் கட்டிக் கொண்டு வெளியிலிருந்து எந்த வகையிலும் அந்த பெண்ணைப் பற்றிய தூண்டுதல் வந்துவிடாமல் பார்த்துக் கொண்டு தியானம் செய்ய முற்பட்டான். சிறிது நேரம் சென்றபின் ‘அந்த பெண் இன்று வந்திருப்பாளோ’ என்ற நினைவு அவன் மனதில் வந்துவிட்டது. இதனால் அவன் விரக்தியின் உச்சத்திற்கே சென்றுவிட்டான்.

அன்பு உள்ளங்களே! கண்ணை மூடிவிடலாம், காதை மூடிவிடலாம், வாயை மூடிவிடலாம், மூக்கைக்கூட மூடிவிடலாம் ஆனால் மனதை எதைக் கொண்டு மூடுவது. மனம் அடங்காமல் வேறு எதை அடக்க முயன்றாலும் நமக்கு ஆனந்தம் என்பது எட்டாக் கனியாகவே இருக்கும். இந்த மனதை அடக்கவும் முடியாது. ஏனென்றால் மனம் அடக்க நினைத்தால் பாயும் தன்மை கொண்டது. பிறகு மனம் அடங்க வழிதான் என்ன?

**“பதிபூசை முதல நற்கிரியையால் மனமெனும் பசுகரணம் ஈங்கு அசுத்த பாவனை அற சுத்த பாவனையில் நிற்கும்”** என்ற வள்ளல்

பெருந்தகையின் திருஅருட்பா வரிகள் இங்கு கவனிக்கப்பட வேண்டியது. இஃது பக்தி மார்க்கம். மனம் காம, குரோத, உலோப, மோக, மத, மார்ச்சர்யம் எனும் ஆறு செயற்கைக் குணங்களைக் கொண்டது. இச்செயற்கைக் குணங்கள் நீங்காமல் மனம் அமைதி அடையாது. இந்த அசுத்த மனதை சுத்த மனதாக மாற்றும் மார்க்கம்தான் பக்தி மார்க்கம்.

இஃதன்றி, ஒருவன் மற்ற சாதனைகளில் ஈடுபடுவதென்பது இரும்பு வேர்கடலையை பல் இல்லாதவன் கடிப்பதை போலும்; வானத்தை பிடியாலும் படியாலும் அளப்பது போலும்; கையால் கடலை நீந்திக் கடப்பதை போலும்; காலில்லாதவன் காற்றோடு ஓட்டப்பந்தயம் செய்வதைப் போலும்; சூரியனில் கால் வைக்க முயற்சிப்பதை போலும்; இருபுறமும் சேனைகள் அம்பை எய்திக் கொண்டிருக்க நடுவே வெற்றுடம்புடன் ஒருவன் சென்று உயிர் பிழைப்பதைப் போலும் அத்தனை கடினமானதாகும். இத்தன்மையதே மற்ற மற்ற சாதனங்கள்.

இவ்வுலகில் நாம் இன்பத்தை அனுபவிக்க வேண்டுமானால் அதற்கு ஒரு பொருள் வேண்டும். அந்தப் பொருளைத் தேடி அடைய வேண்டும். அதை அனுபவிக்க கருவி கரணங்கள் நன்றாக இருக்க வேண்டும். ஆனால் காலப்போக்கில் கருவிகரணங்கள் நம்மை பழக்கவாசனைக்கு ஆளாக்கி பின்னர் தானும் பழுதடைந்து நாம் இன்பத்தை அனுபவிக்க முடியாமல் செய்துவிடும். எந்தப் பொருளும் இல்லாமல், தேடி அடைய வேண்டாமல், கருவி கரணங்களுக்கு அடிமையாகாமல் இருந்த இடத்திலிருந்தே அனுபவிக்கும் மெய்ப்பொருள் ஒன்று இவ்வுலகில் உண்டு. அதுதான் **கடவுள்.** அதை அனுபவிக்கும் வழிதான் பக்தி மார்க்கம். இம்மார்க்கத்தில் நின்று இறையின்பத்தை அனுபவித்த ஞானியர்கள் பலர்.

அத்தகையோர் தாம் பெற்ற இன்பத்தை இவ்வுலக உயிர்களும் பெற்று உய்வடைய வேண்டும் என்பதற்காக பக்தி நெறிக்கான எட்டுப் படிநிலைகளை அருளியுள்ளனர். இது ஒவ்வொரு ஆன்மாவையும் பிறவிக் கடலிலிருந்து கரையேற்ற உதவும் தோணி போன்றதாகும்.

கடவுள் இம்மனித தேகத்தில் பொறி புலன்களைப் படைத்தது அவரை உணர்வதற்காகவே என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் இம்மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு அதை கடைபிடிக்க முடியும். இனி பக்தியின் படிநிலைகளைக் காண்போம்.

**1. கடவுளின் புகழைக் கேட்டல்: “கொடிய சொல் செவி புகாது நாதம் முதலிய தோத்திரங்களைக் கேட்டல்”** என்பது வள்ளல் பெருமான் அருளிய இந்திரிய ஒழுக்கத்தில் முதல் கட்டளை. நாம் பெற்ற செல்வத்தைக் காட்டிலும் மிக உயர்ந்த செல்வமாக திருவள்ளுவப்

பெருந்தகை கூறுவது செவிச் செல்வமே. ஆக கடவுளின் புகழை கேட்க கேட்க நமக்கு கடவுளைப் பற்றிய சிந்தனை நம் மனதில் ஆழமாகப் பதிகிறது. இதனால் கடவுள் மீது நாட்டம் உருவாகும். குளவி ஒரு புழுவை கொண்டு வந்து தனது கூட்டிற்குள் அடைத்து வைத்து அடிக்கடி அந்த கூட்டை சுற்றி வந்து சப்தமிடும். சிறிது காலம் சென்றபின் அந்த புழு குளவியாக மாறி கூட்டை விட்டு பறக்கத் தொடங்கும். ஒரு சாதாரண புழு குளவியின் சப்தத்தைக் கேட்டுக் கேட்டு குளவியாக மாறுவதுபோல் சாதாரண தரத்தில் உள்ள ஜீவர்களாகிய நாம் இறைவனின் புகழை கேட்க கேட்க கடவுளின் திருவடிகளில் சேர்வதற்கான ஞானம் விளங்கும்.

கடவுளைப் பற்றி கேட்பது எவ்வளவு மகத்துவம் வாய்ந்தது என்பதை வள்ளல் பெருமானார் அருட்பாவில் ஒரு பாசுரத்தில் பதிவு செய்துள்ளதை காண்போம்.

**“வாட்டமிலா மாணிக்கவாசக நின்வாசகத்தை கேட்டபொழுது**
**அங்கிருந்த கீழ்ப்பறவை சாதிகளும் வேட்டமுறும் பொல்லா**
**விலங்குகளும் மெய்ஞான நாட்டமுறும் எனில் இங்கு**
**நான் அடைதல் வியப்பன்றே”** என்கிறார்.

இப்பாசுரத்தில் நம் பெருமானார் இறைவன் புகழை கேட்ட மாத்திரத்தில் அங்கிருந்த பறவை இனங்களில் மிகவும் இழிந்ததாக கருதப்படுகின்ற பறவைகளும், எப்பொழுதும் கொடூரமான குணத்தைக் கொண்டிருக்கும் விலங்குகளும்கூட இறைவன்பால் நாட்டம் கொள்ளும் என்றால் உன்மீது நான் நாட்டம் கொள்வது வியப்பல்லவே என்கிறார். இதனையே வள்ளுவப் பெருந்தகை

**கற்றிலன் ஆயினும் கேட்க அதுஒருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை**

பொருள்: புனிதமான விஷயங்களை ஒருவன் முயற்சி மேற்கொண்டு கற்க வேண்டும். அவ்வாறு கற்கவில்லையென்றாலும் கற்றவர்கள் கூறும் வார்த்தைகளையாவது செவிமடுத்துக் கேட்க வேண்டும். அப்படி கேட்கும்போது கேட்பவர்க்கு வாழ்க்கையில் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அது உதவும். மேலும்,

**கற்கும் முறை கற்றறியேன் கற்பன கற்றிந்த**
**கருத்தர் திருக்கூட்டத்தில் களித்திருக்க அறியேன்**

அதாவது **‘தெய்வம் பராவல்’** என்ற கருத்தையே மேற்கண்ட அருட்பாவின் இரண்டாம் அடியில் உணர்த்துகிறார் நம் வள்ளல் பெருமானார். சாதுக்கள், ஆன்மீகப் பெரியோர்கள் இவர்களின் தொடர்பில் இருக்கும்போது கடவுளது புகழை கேட்கும் பாக்கியம் நமக்குக் நிறைய கிடைக்கிறது. இதுவே **தெய்வம் பராவல்.**

இதை தவமே உருவாய் வீற்றிருந்த ரமண பகவான், **அன்போடு உன் நாமம் கேட்கின்ற அன்பர்தம் அன்பருக்கு அன்பனாயிட அருள்செய் அருணாச்சலா** என்கிறார். மேலும், வாயால் உண்பது வயிற்றுப் பசியைத் தவிர்த்து அந்த உணவு கீழ்ச்சென்று தங்கி உடலுக்குச் சக்தியை கொடுக்கும். ஆனால், செவியால் கேட்பதென்பது ஆன்மாவிற்கான உணவு. அது ஆன்மப்பசியை தீர்க்கும். அந்த உணவு மேலே சென்று தங்கி மனதிற்கும், ஆன்மாவிற்கும் சக்தியை கொடுக்கும். கற்கும் முறை தெரியாவிட்டாலும் பரவாயில்லை. கற்றவரோடு இணங்கி இருந்தால் கூட நம்மை மேல்நிலைக்கு இட்டுச் செல்லும்.

**2. கடவுளை எப்போதும் நினைத்தல்: "உன்னை மறக்கில் எந்தாய் உயிர் என் உடம்பில் வாழுமோ", "உன்னை மறந்திடுவேனோ மறப்பறியேன் மறந்தால் உயிர் விடுவேன் கணம் தரியேன் உன் ஆணை இது" "நினைத்தபோதெல்லாம் நின்னையே நினைத்தேன்"** போன்ற வள்ளல் பெருமானாரின் திருஅருட்பா வரிகள் இறைவனை எப்படி நினைக்க வேண்டும் என கற்றுத் தருகிறார். நாம் அனைவரும் இன்பமாக வாழவே விரும்புகிறோம். ஆனால் எது நமக்கு முழுமையான இன்பத்தைக் கொடுக்கும் என்று தெரிந்து கொள்வதில்லை.

நம் ஞானிகள் கடவுளை சச்சிதானந்தப் பொருள் என்று கூறுகின்றனர். அதாவது சத்து+சித்து+ஆனந்தம். சத்து - எக்காலத்திலும் உள்ளது; சித்து - பூரண அறிவுடையது; ஆனந்தம் - முடிவற்ற இன்பத்திலிருப்பது. இதனின்று நாம் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது நிரந்தரமான ஒரு பொருளால்தான் நமக்கு நிரந்தரமான ஆனந்தத்தை - இன்பத்தை கொடுக்க முடியும். **''கண்டதெல்லாம் அநித்தியமே கேட்டதெல்லாம் பழுதே''** என்பார் நம் வள்ளல் பெருமானார். எனவே இவ்வுலகப் பொருட்கள் அநித்தியம் என்பதும் அதனால் கிடைக்கும் இன்பமும் அநித்தியமே என்பதும் கடவுள் ஒருவரே நித்தியமானவர் என்பதும் தெளிவாகிறது. இப்படிப்பட்ட இயல்பை உடைய பரம்பொருளை நாம் எப்படி நினைப்பது?

**"சர்வ சித்தியை உடைய கடவுள் ஒருவர் உண்டென்று நம்பி அவரை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்யின் அத்திருவருள் கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்கும்"** என வழி காட்டுகிறார் நம் பெருமானார்.

**3. கடவுளின் அருட்புகழை பாடுதல்:**

வள்ளல் பெருமானார் **"சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்"** என்பார். அதாவது, எப்பொழுதும்

*மெய்ஞ்ஞான நூல்களில் அருளிய மொழிகளில் எதுவொன்றை தொடர்ந்து நினைக்கின்றோமோ அதுவே இறுதியில் வந்து முடியும்.*

*அதற்காகவே நம் ஞானிகள் அநேக மந்திரங்களையும், பாக்களையும் அருளியுள்ளனர். வாழையடி வாழையென தோன்றிய திருக்கூட்ட மரபில் வந்த நம் வள்ளல் பெருமானார் இறைவனின் உண்மையை உணர்த்தும்*

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**

**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

*என்ற* ***மகாமந்திரத்*** *திருவாக்கியத்தையும் 5818 பாக்கள் கொண்ட திருஅருட்பா எனும் தமிழ் வேதத்தையும் ஜீவர்களாகிய நமக்கு அருளியுள்ளார்.*

***"பாடிப் பணிதல், ஜெபதபம் செய்தல்"*** *இவற்றை நாம் நித்தியம் செய்ய வேண்டிய சாதனைகளுள் ஒன்றாக அமைத்துள்ளார். அதற்கிணங்க நாம் நாள்தோறும் இறைவனை நினைக்க வேண்டும். ஒவ்வொருவரும் நமது நாவினால் இறைவனது புகழை பாடிப் பணிதல் வேண்டும். அப்போதுதான் இறைவனின் இணையடி மலரைச் சேர முடியும்.*

**போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்** *என்ற மணிவாசகரின் வாக்கிற்கிணங்க இறைவனைப் போற்றிப் பாடுவதால் எந்நாளும் துன்பமின்றி வாழ முடியும். இதனை வள்ளல் பெருமானாரும் ஒரு பாடலில்*

**"வள்ளால் உன்னைப் பாடப்பாட வாய்மணக்குதே**

**வஞ்சவினைகள் எனை விட்டோடி தலை வணக்குதே"** *என்று அருளியுள்ளார். மேலும் இறைவனை பாடுவதால் நமக்கு கிடைக்கும் பயனைப் பற்றி திருமூல நாயனாரும் திருமந்திரத்தில் அருளியுள்ளார்கள்.*

**நாடும் நகரமும் நல்திருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாகக் கொள்வனே.**

*இறைவனது புகழை மகான்கள் அருளியபடி பாடிப் பணிவதால் நெஞ்சம் ஒருநிலைப்படும். அந்த ஒருநிலைப்பட்ட நெஞ்சத்தையே இறைவன் கோயிலாகக் கொண்டு வாழ்வான் என அருளியுள்ளார். உண்மையான அன்போடு பாடிப் பணியும் பக்தனின் உள்ளத்தில் இறைவனே குடி கொள்கிறார் என்றால் நம் முன்னோர் வகுத்தருளிய இந்நெறி போற்றுதற்கு உரியதல்லவா. – படிக்கட்டுகள் தொடரும்...*

**பத்தி நெறியில் செழித்தே – அன்பில் பாடும் மெய்யன்பர் பதியில் பழுத்தே**
**தித்தித்து இருப்பது பாரீர் திருசிற்றம்பலத்தே திருநடஞ் ஜோதி – திருஅருட்பா**

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொருப்
பேர்சான்ற உண்மைப் பிரமமே - நேர்சான்றோர்
நாடும் பரசிவமே நாயேனுக்கு அன்பு
நின்பால் நீடும்படி நீநிகழ்த்து. 1

தொடுக்கவோ நல்ல சொன்மலர் இல்லை
நான் துதிக்கவோ பத்தி சுத்தமும் இல்லைஉள்
ஒடுக்கவோ மனம் என்வசம் இல்லை
ஊடுற்ற ஆணவமாதி மலங்களைத்
தடுக்கவோ திடம் இல்லை என்மட்டிலே
தயவுதான் நினக்கு இல்லை உயிரையும்
விடுக்கவோ மனம் இல்லை என்செய்குவேன்
விளங்குமன்றில் விளங்கிய வள்ளலே. 2

மருந்தறியேன் மணியறியேன் மந்திரம் ஒன்றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கை நிலையறிறேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினில்ஓர் இடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்த அறிவேனோ
இருந்ததிசை சொலஅறியேன் எங்ஙனம் நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும் அறிந்திலனே. 3

# திருமந்திரம்

**குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்**
**அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்**
**இயக்கில்லை போக்கில்லை ஏனென்பது இல்லை**
**மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே. - கருஉற்பத்தி**

*காக்கைக் கூட்டில் குயில் முட்டையிட அதனை அக்காக்கை சிறிதும் ஐயம் கொள்ளாது அடைகாத்து வெளிப்படுத்துவது போல, இறைவன் ஜீவர்களின் வினைக்கீடாய் அந்த ஜீவர்களை அருவுடலோடு உருவுடல் பெற தந்தைக் கருவில் இரண்டு மாதமும், தாய்க் கருவில் பத்து மாதமும் புகுத்தி அருளுகின்றார். அதனால் அனைத்து உயிரும் ஆண்டவன் மக்களே. அவ்வுண்மை உணராது அறியாமையால் பெற்றோர் தம் மக்களே எனக் கூறுகின்றனர்.*

*உண்மை உணர்ந்தார், ஆசான் மாணாக்கரை பார்ப்பதுபோல் தம் மக்களையும், பிறர் மக்களையும் ஏனைச் சிற்றுயிர்களையும் இறை நினைவுடன் ஒன்றாகக் கருதி நன்மையைச் செய்வர். அங்ஙனம் செய்வதே இறைப்பணியாகும்.*

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS ∝

Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755

# உணவும் உணர்வும்

இம்சையால் உண்டான தாமஸ பொருட்கள், மாமிசம் போன்றவைகளை தியாகம் செய்யாமல் மூல தர்மமான அஹிம்சா தர்மத்தைக் கடைபிடிக்க முடியாது. பல நூல்களில் இதைப் பற்றிய மேற்கோள்கள் கிடைக்கின்றன. பகவான் மகாவீரர், "வாழு - வாழ விடு" என்று அருளினார். மேலும் (தனது உயிரைப் போலவே பிறரது உயிரும்) என்னுடைய ஆத்மா எப்படியோ, அப்படியே ஒவ்வொரு பிராணிக்கும் அதனுடைய ஆத்மனும் ஆகும். ஒவ்வொருவரிடமும் இப்படிப்பட்ட எண்ணம் இருக்குமேயானால் அவரவரது உள்ளத்திலேயே பகவானைப் பார்க்க முடியும். இந்த எண்ணம் மேலோங்கி இருந்தால் மாமிசத்தை உண்ண மாட்டோம்.

மஹாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணர், "யார் பிற உயிர்களை வதைக்கிறார்களோ, மாமிசத்தை புசிக்கிறார்களோ அவர்கள் அந்த மிருகத்தின் உடலில் எவ்வளவு ரோமங்கள்(மயிர்) உள்ளனவோ அவ்வளவு ஆயிரம் ஆண்டுகள் (ஒரு முடிக்கு ஆயிரம் ஆண்டுகள்) நரகத்தில் வதைக்கப்படுகிறார்கள்" என சொல்கிறார்.

ஊன் உணவு உண்ணும் ஒருவன் அவனுடைய தாய், தந்தை, மகன், சகோதரன், நண்பனின் சதைகளைத்தான் உண்கிறான். ஏனென்றால் ஒவ்வொரு ஜீவனும் (நாற்கதிகளிலும்) ஏதோவொரு பிறவியில் தன்னோடு தொடர்புடையதாக இருக்கும் என பத்ம புராணம் பர்வம் 26ல் சொல்கிறது.

துறவி துக்காராம், சகோதரர்களே! ஏழை எளியோர்களே! வாயில்லா ஜீவன்கள் மிரண்டுபோய் கத்தும் பொழுதும் நீங்கள் தயவு இல்லாமல் மிருகத்தின் கழுத்தில் கூரிய வாளால் வெட்டுகிறீர்கள். இந்த கீழ்த்தரமான வேலையை செய்கிறவனும், செய்ய அனுமதிப்பவனும் இருவரும் நரகத்தை சென்றடைவார்கள் என்று கொல்லாமையையும் புலால் மறுத்தலையும் வலியுறுத்துகிறார்.

குரானில் ஹாக்கிமின் தோற்றம், அங்கம் 32:22ல் தெளிவுபடுத்தி உள்ளார்கள். பிராணிகளின் மாமிசமோ அல்லது அவைகளின் இரத்தமோ இறைவனிடத்தில் செல்வதில்லை. மனிதனுடைய தியாகமும் கருணையும்தான் இறைவனிடத்தில் சென்றடைகின்றன. எங்கே கருணை, தயவு உள்ளதோ அங்கே ரஹீம் (அல்லா) இருக்கிறார். கருணை உள்ளவர்கள் மீது ரஹ்மானும் கருணை கொள்கிறார்.

பௌத்த சமயத்திலும் மாமிச உணவிற்கு தடை செய்துள்ளார்கள். எனவே பிராணிகளுக்கு ஹிம்சை செய்யாதிருத்தல் ஆன்ம நலம் பயக்கும்.

குருநானக், சொல்வதாவது: அசைவத்தை உண்ணாதே, அசைவத்தை

உண்பவர்களிடம் நான் உணவு ஏற்க மாட்டேன் என்கிறார்.

மேலும், தேவ - தேவியர்களுக்கு முன்னால் உயிர் பலி இடுகிறார்கள். அதை தர்மமாகவும் நினைக்கிறார்கள். ஜீவ ஹிம்சையை தர்மமாகக் கருதினால் அதர்மத்தை என்ன சொல்லுவார்கள்?

தேவி புராணத்தில், "மிருகங்களை வதை செய்து எனக்கு பூஜைகள் செய்வதை நான் ஏற்றுக் கொள்வதாகக் கருதுகிறார்கள். அவ்வாறு வதம் செய்து என்னையும் மாசுபடுத்திவிடுகிறார்கள்" என தேவி தன்னுடைய பக்தர்களுக்கு சொல்கிறாள். இதனால் ஜீவஹிம்சை செய்து தேவிக்கு அர்ப்பணம் செய்வதை தேவியே ஏற்றுக் கொள்வதில்லை எனத் தெரிகிறது. அப்படி இருக்கையில் தேவியின் பக்தர்களுக்கு மாமிச உணவு எப்படி உன்னதமானது? அது இழிவல்லவா.

ஆகவே **மாணவப் பருவத்திலேயே ஜீவகாருணியத்தை விதைப்பதே சரியானது. ஜீவகாருண்யம் இல்லாமல் மாணவ – மாணவிகள் இருக்கக் கூடாது.**

நமது பாரத தேசத்தின் துரதிஷ்டம் என்னவென்றால், நவீனம் என்ற பெயரிலே இன்றைய நாகரீகம் என்கின்ற போர்வையில் மாய பிரச்சாரத்தினால் முட்டையை மக்கள் தாவர உணவாகக் கருதுகிறார்கள்.

1962ல் யுனிசெப் (UNICEF)ன் ஒரு கட்டுரையில் கூறியுள்ளதாவது: மக்கள் முட்டையை விரும்பி ஏற்க வேண்டும் என்ற வியாபார நோக்கிற்கு செயற்கை முறையில் உருவான முட்டைகளை சைவமாகப் பிரசாரம் செய்கிறார்கள். செயற்கை முறையில் உருவான முட்டைக்கு சைவம் என்று பொய்யாக (மித்யா) கூறி பாரதத்தில் தாவர உணவை உண்பவர்களிடத்தில் பிரம்மையை தோற்றுவிக்கிறார்கள்.

1969ல் அமெரிக்காவில் மஷிகின் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானி. டாக்டர் பிலிப் ஜே ஸ்கேபல் என்பவர் தனது ஆய்விலே, "உலகத்தின் எந்தவொரு முட்டையிலும் உயிர் இல்லா பொருள் இல்லை. அது செயற்கை முறையிலோ, வேதியியல் முறையிலோ தயாரானதாக இருந்தாலும் அந்த முட்டைகளில் உயிர் அணுக்கள் அவசியம் உள்ளன. முட்டையை தாவர உணவாகக் கருதுவது மிகப் பெரிய ஏமாற்றுத்தனம்" என்று கூறியுள்ளார்.

மாமிச உணவான முட்டையில் கீழ்கண்ட நச்சுப் பொருட்கள் உள்ளன. அவையாவன: 1.கொலஸ்ட்ரால்; 2.லய்யோ புரோட்டின்ஸ்; 3.நேச்சுரேட்டன் பேட்டி ஆசிட்ஸ்; 4. எஸ்.ஆர்.பிரேக்-ன் 10 லிருந்து 20 வரை; 6. P.P.T., இந்த நச்சுப் பொருட்களால் மாரடைப்பு, உயர் இரத்த அழுத்தம், குடல் அழுகுதல், மனநோய்கள், புற்றுநோய், ஹைஜீமா வகீவம், பித்தபையில் கற்கள், குடல்ரோகம் போன்ற நோய்கள் உண்டாகும், மேலும் மரணம் கூட நிகழலாம். மனித

உடல் அமைப்பிற்கு தாவர உணவு தான் தகுதியானது.

தாவர உணவை உட்கொள்ளும் விலங்கினங்கள் தன் உதடுகளால் தண்ணீர் குடிக்கும். ஆனால் மாமிச உணவை உட்கொள்ளும் விலங்கினங்கள் தன் நாவால் தண்ணீரை குடிக்கும். எருது, பசு, யானை போன்ற தாவர மிருகங்களுக்கு முன்னால் தண்ணீரை வைத்தால் அவைகள் தமது உதடுகளால் உறிந்து நீரைப் பருகும். நாய், பூனை, சிங்கம் போன்ற ஊன் உண்ணிகள் முன்னால் தண்ணீர் வைத்தால் அவைகள் தன் நாவினால் நக்கிக் குடிக்கும். மனிதர்களான நாம் எவ்வாறு தண்ணீரை குடிக்கிறோம்? தாவர உண்ணி விலங்குகளைப் போன்றா - ஊன் உண்ணி விலங்குகளைப் போன்றா? ஊன் உண்ணிகளின் பற்களின் அமைப்பு வட்டமாகவும், கூர்மையாகவும் இருக்கும். நகங்களும் அவ்வாறே இருக்கும். ஆனால் தாவர உண்ணிகளின் பற்கள் பட்டையாகவும், தட்டையாகவும் இருக்கும். அவ்வாறே நகமும் பட்டையாக இருக்கும். கூர்மையான பற்களையும், நகத்தையும் உடையவை மற்ற பிராணிகளை தாக்கி உண்பதற்காக அமைந்துள்ளன. மனிதனுடைய பற்களும், நகங்களும் தட்டையாகவே உள்ளன. இந்தக் காரணத்தினால் மனிதன் இயற்கையாகவே தாவர உணவையே உட்கொள்ளும் அமைப்பினை பெற்றுள்ளான் என்பது தெள்ளத் தெளிவாக தெரியவருகிறது. எனவே மனித உடலமைப்பு மாமிச உணவை (சமைக்கப் பட்டிருந்தாலும், பதப்படுத்தப் பட்டிருந்தாலும் அல்லது தீயினில் வாட்டி இருந்தாலும்) இயற்கையாகவே ஏற்காது.

உலக உடல் நலச் சங்கம் (World Health Organization - W.H.O) வெளியிட்ட ஒரு இதழிலே கீழ்கண்ட செய்தி வெளிவந்தது. ஒரு முறை மாமிசம் உண்டால் 960 விதமான நோய்கள் மனிதனின் உடலில் நுழைகின்றன. ஒரு சிறு துண்டு மாமிசத்தில் மூன்று கோடி உயிரணுக்கள் (கீடாணு) இருக்கின்றன. அவைகள் மாமிசத்தை துண்டு செய்யும் பொழுது மேலும் தீவிரமாக அதிகரிக்கின்றன. ஆட்டின் இறைச்சியில் கபம், பித்தம் உண்டாகிறது. இறைச்சியை உட்கொள்கின்ற மனிதனுக்கு பிராணிகளின் பழக்க வழக்கமும் மேலும் அவை வெட்டப்படும் போது உண்டாகும் ரௌத்திர குணங்களும் அவைகளின் இறைச்சியை உண்பவர்களுக்கு வருகிறது.

எனவே குரோதத்தையும் குணக்கேட்டையும் உண்டுபண்ணும் மாமிச உணவு சிறியவர், மாணவ மாணவியர் முதல் பெரியவர் வரை அனைவரும் தவிர்க்க வேண்டிய முக்கிய ஆகாரமாகும். தாவர உணவே ஏற்புடையதாகும்.

# அருள்நிலையுறுவோம்

தயவுதிரு. இராம இருசுப்பிள்ளை அவர்கள், கோவை

**ந**ம் முன்னோர்கள் இறைநிலை பற்றியும் அந்நிலை எய்தவல்ல நெறிகள் பற்றியும் பல்வேறு வழிமுறைகளை அருளியுள்ளனர். அவை அனைத்தையும் ஒன்று திரட்டி **"கோளில் பொறியில் குணம் இலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை"** என்ற குறளில் பரம்பொருளின் இயல்புகளை எட்டாகக் கூறலாம் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அவை **தன்வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை** என்பனவாகும் என பிற ஞானியர்களும் பரிமேலழகர் போன்ற அறிவாய்வில் நிறைந்தாரும் கூறுவன.

"எட்டுக் கெலாம் அவர் ஈறுஇல் பெருங்குணம்" எனவும்; "எட்டு வான்குணத்து ஈசன் எம்மான்" எனவும்; "காதல் எண்குணவன் காண்" எனவும் அப்பர் பெருமான் கூறுவதனையும் "இறையவனை மறையவனை எண்குணத்தினானை" என சுந்தரர் பெருமான் கூறுவதனையும் ஈண்டு நினைந்து பார்க்கலாம்.

அத்தகு இறைநிலை உறுவதற்கு இந்நாட்டுத் தத்துவங்கள் பல்வேறு நெறிகளைக் காட்டியுள்ளன. அவையெலாம் **சாயுச்சிய** நிலையெனும் ஒன்றுபட்டு நிற்கும் நிலையைத்தான் இறுதியாகக் காட்டுவன.

ஒரு பானை நிறைய இனிய தேன் நிரப்பப்பட்டுள்ளது. அதன் சுவையைச் சுவைக்கத் தேனீக்கள் பல திரண்டு எழுந்தன. சில பானை ஓரத்தில் இருந்து சுவைத்தன; பல தேனில் மூழ்கிச் சுவைக்க எண்ணித் தேனிலேயே மூழ்கின; தன்னை இழந்தன; அவையே இல்லாதபோது சுவை எங்கே? சுவைப்பது எங்கே? அதுபோன்று சாயுச்சியமாம் ஒன்றுபடு நிலையில் தன்னை இழந்து தம்பெருமான் அருளனுபவத்தை இழக்க வேண்டியதாகிவிடுகிறது. புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாய், கல்லாகி எனப் பலநிலைகளைத் தாண்டி மனித நிலையுற்ற பின்னர் (மனிதன்=மன்+நிதன் மன்=நிலைபேறு; நிதன்=எப்போதும் இருப்பவன்) நிறைநிலையாய் என்றும் நிலைத்து வாழ்ந்து, ஞானானந்த அனுபவமாய் விளங்குபவன் என்பது தெளிவு.

*சாயுச்சிய நிலையாம் இறைநிலையோடு சமாதி நிலையில் ஒன்றுபட்ட ஆன்மாவால், இறை அனுபவத்தை அனுபவிக்க முடியாது; அதுதான் ஒன்றுமற்றதாக கரைந்து விட்டதே. எனவே, தேனை பானையின் விளிம்பிலிருந்து சுவைத்த தேனீக்கள்போல இறை அனுபவம் பெற்ற ஆன்மா என்றும் நின்று ஆனந்தமாக வாழும் நெறிமுறைகள் உள்ளன.*

*முதலில் ஆன்மாவும் பரமான்மாவும் பிரிக்கவியலா உறவு நிலையில் உள்ளன என்ற உண்மையில் தெளிவும் உறுதியும் இருத்தல் வேண்டும்.*

**"பிரிவிலவாய்ப் பிரிவுளவாய்ப் பிறங்கியுடல் கரணம்**
**நண்ணிடத் தேர்ந்து இயற்றி அதின் நடுநின்று விளங்கும்**
**நல்ல திருவடிப்பெருமை சொல்லுவதார் தோழி"**

**(திருஅருட்பா, திருவடிப்பெருமை 33)**

**"எனக்குள் நீயும் உனக்குள் நானும் இருக்கும் தன்மையே"**

**(திருஅருட்பா, மெய்ப்பொருள் விளக்கம் 25)**

**"போற்றி இப்புவனம் நீர் தீ காலொடு வானம் ஆனாய்**
**போற்றி எவ்வுயிர்க்கும் தோற்றம் ஆகி; நீ தோற்றம் இல்லாய்**
**போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாய்; ஈறு இன்மை ஆனாய்**
**போற்றி ஐம்புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே"**

**(திருவாசகம்)**

*இப்படி எல்லாமாகி நிற்கின்ற இறைநிலையே ஏதும் தானல்லாதாய்த் திகழ்கின்றது எனக்கூறி மாணிக்கவாசகப் பெருமான் அருளியுள்ளார். அடுத்து ஆன்மாவுக்கும் பரமான்மாவுக்கும் உள்ள உறவு நிலையை நாவுக்கரசர் பெருமான்,*

**''விண்ணாகி நிலனாகி விசும்புமாகி வேலை சூழ்ஞாலத்தார் விரும்புகின்ற**
**எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி ஏழுலகும் தொழுது ஏத்திக் காண நின்ற**
**கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக் காதலித்து அங்கு அடியார்கள் பரவநின்ற**
**பண்ணாகி இன்னமுதாம் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்தவாறே"**

*எனக்கூறித் தெளிவுபடுத்துகிறார்.*

**மண்ணல்லை விண்ணல்லை வலயம் அல்லை,**
**மலையல்லை கடல்அல்லை வாயு வல்லை**
**எண்ணல்லை எழுத்தல்லை எரியும் அல்லை**
**இரவல்லை பகல்அல்லை யாவும் அல்லை**
**பெண்ணல்லை ஆணல்லை பேடும் அல்லை;**
**பிறிது அல்லை ஆனாயும் பெரியாய் நீயே**
**உண்ணல்லை நல்லார்க்குத் தீயை அல்லை**
**உணர்வறிய ஒற்றியூர் உடைய கோவே.**

*எனவும் கூறி இறைநிலையே எல்லாமாக இருப்பினும் எதுவும் அதுவாக இல்லை எனச் சிந்திக்க வைக்கிறார்.*

*இந்த உறவைப் புரிந்து தெளிவுற்று அதுவாக விளங்கும் நிலையுற வழி என்ன?* **அருள்நிலையுறுதல்தான்,** *அருள்நிலை நின்றால் அன்றி தெருள் நிலைபெறுதல் இயலாது.*

**நண்ணிய மதவெறி பலபல அவையே நன்றற நின்றன சென்றன சிலவே**
**அண்ணிய உலகினர் அறிகிலர் நெடுநாள் அலைதருகின்றனர் அலைவற மகனே**
**புண்ணியம் உறுதிரு அருள்நெறி இதுவே பொதுநெறி எனஅறிவுற முயலுதிநீ**
**தண்ணிய அமுதுணத் தந்தனம் என்றாய் தனி நடராச என் சற்குருமணியே**

*(திருஅருட்பா; சற்குருமணிமாலை 14)*

**தயைஉடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே**
**ஈங்கவர்கள் தம்மோடும் கூடி நயம் உறு நல்**
**அருள்நெறியில் களித்து விளையாடி நண்ணுக**

*(அருட்பா சுத்த சன்மார்க்க வேண்டுகோள் 74)*

**“அருள்ஒளி என்தனி அறிவினில் விரித்தே**
**அருள்நெறி விளக்கெனும் அருட்பெருஞ்ஜோதி”**

*(திருஅருட்பா அகவல் 275 - 276)*

**“அருள் அலாது அணுவும் அசைந்திடாது அதனால்**
**அருள் நலம் பரவுக என்று அரைந்த மெய்ச்சிவமே”**

*(திருஅருட்பா அகவல் 977 - 978)*

**“அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம்**
**இருள்நெறி என எனக்கு இயம்பிய சிவமே”**

*(திருஅருட்பா அகவல் 981 - 982)*

**“அருள் நிலை ஒன்றே அனைத்தும் பெறும் நிலை**
**பொருள்நிலை காண்க எனப் புகன்ற மெய்ச்சிவமே”**

*(திருஅருட்பா அகவல் 995 - 996)*

*என்றெலாம் வள்ளற் பெருமான் வெளிப்படுத்தி அருளே அனைத்தும் பெறுநிலை எனக்கூறி, அருள் நிலையுறுதல்தான் மெய்நிலை உணர்வுக்கு வழிமுறை என்று விளக்கியுள்ளார். தாயுமானவரும்,*

**“அருளால் எவையும்பார் என்றான் – அதனை**
**அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்**
**இருளான பொருள்கண்ட தல்லால் – கண்ட**
**என்னையும் கண்டிலன் என்னேடி தோழி”**

*(ஆனந்தக் களிப்பு 13)*

**“தன்னை அறிந்து அருளே தாரகமா நிற்பதுவே**
**உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே”** *(பராபரக் கன்னி 96)*

*எனக்கூறி மெய்பொருள் உணர்வுக்கு அருள்நிலையுறுதலே வழி என்கிறார்.*

*காரைக்கால் அம்மையார் தமது அற்புதத் திருவந்தாதிகளில்*

**"அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்**
**அருளே பிறப்பறுப்பதானால் – அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்**
**எப்பொருளும் ஆவது எனக்கு" (அற்புதத் திருவந்தாதி)**

*எனக்கூறி அருள்நெறியின் பெருமையை விளக்கியுள்ளார்.*

*அருள்நிலை நின்று அருள்நெறி பற்றி அருளால் விளங்கப் பெற்றவர்கள் ஏற்றத் தாழ்வு இல்லா இயல்பினராய், எல்லாம் ஒன்றெனக் காணும் உணர்வினராய்; மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் என எண்ணி இன்புறுவர்; மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம் என்று உணர்ந்து ஒழுகுவர். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதில் தெளிவுபெற்றவராய் விளங்குவர். இறைநிலையை உணர்ந்து வாழ்பவராய் இருப்பர்.*

**"எத்துணையும் பேதம் உறாது**
**எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணிஉள்ளே**
**ஒத்து உரிமை உடையவராய்**
**உவக்கின்றார் யாவர்அவர் உளம்தான்**
**சுத்த சித்துருவாய் எம்பெருமான்**
**நடம்புரியும் இடம்....."** *(திருஅருட்பா தனித்திரு அகவல் 2)*

*என்பதில் தெளிவாய் இருப்பர்.*

*அருள்நெறி என்பது யாது? சிவஞான சித்தியார் என்ற சைவ சித்தாந்த நூலுள்,*

**"அருளது சக்தியாகும் அரன்தனக்கு அருளை இன்றித்**
**தெருள்சிவம் இல்லை அந்தச் சிவம் இன்றிச் சக்தி இல்லை**
**மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க்கு அளிப்பன் கண்கட்டு**
**இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்"**

*(சிவஞான சித்தியார்; பக்கம் 9)*

*என்ற பா உள்ளது. சிவம் மற்றும் அருள் வேறு வேறானவை அல்ல. சிவம் ஒளி, அருள் அதன் குணம் என்பது விளக்குகின்றது. கதிரவன் தன் ஒளியால் இருளை ஓட்டுவது போன்று, இறைநிலை தன் அருளாகிய ஆற்றலால் எல்லாவற்றையும் செய்கின்றது என்கிறார்.*

*அருள் நிலையுற்றார், உள்ளொளி பெருக வாழ்வர், அவர் உடம்பு சுத்த உடம்பாகி, பிரணவ உடம்பாகி, ஞான உடம்பாக விளங்கி அழியாப் பெருநிலையுற்று இறைநிலை தெளிந்து என்றும் இருந்து*

*ஞானானந்த அனுபவத்தில் திளைப்பர்.*

*இதனை வள்ளலார்,* **"ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்று உறுமோ ஊழிதோறூழி சென்றிடினும் என்றும் இங்கு இறவா இயற்கை என்று உறுமோ"** *எனக் கூறி மரணம் - செயற்கை, இறவா நிலையே இயற்கை எனவும் சிந்திக்க வைக்கின்றார்.*

*வள்ளற் பெருமானாரின் சுத்த சன்மார்க்க நெறி என்பது சாகாத நெறியே என்பதனைப் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார். அவற்றுள் ஒன்று,*

**"சாகாத கல்வியே கல்வி, ஒன்றே சிவம்**
**தான்என அறிந்த அறிவே தகும்அறிவு, மலம் ஐந்தும்**
**வென்றவல்லபமே தனித்த பூரணவல்லபம்**
**வேகாத காலாதி கண்டுகொண்டு எப்பொருளும் விளைய**
**விளைவித்த தொழிலே மெய்த்தொழிலதாகும் இந்நான்கையும்**
**ஒருங்கே வியந்து அடைந்து உலகம் எல்லாம்**
**மாகாதலுற எலாம்வல்ல சித்தாகி நிறைவான**
**வரமே இன்பமாம் மன்னும் இதுநீ பெற்ற**
**சுத்தசன்மார்க்கத்தின் மரபு என்று உரைத்த குருவே**
**தேகாதி மூன்றும் நான்தருமுன் அருள் செய்து**
**எனைத்தேற்றி அருள் செய்த சிவமே**
**சிற்சபையின் நடுநின்ற ஒன்றான**
**கடவுளே தெய்வ நடராச பதியே"** *(திருஅருட்பா; நடராசப் பதிமாலை)*

*என்பதாகும்.*

**"அருள்நிலை ஒன்றே அனைத்தும் பெறும் நிலை,**
**பொருள் நிலை காண்க எனப் புகன்ற மெய்ச்சிவமே;**
**அருள் வடிவு அதுவே அழியாத் தனிவடிவு**
**அருள்பெற முயலுக என்று அருளிய சிவமே"**

*(திருஅருட்பா; அகவல் 995 - 998)*

*என்று கூறி அருளுறின் எல்லாம் ஆகும் என்பதனைத் தெளிவு படுத்துகின்றார்.*

**மன்** *என்றால்* **நிலைபேறு** *என்பது பொருள். மனிதர்களால்தான் அவர்களின் பெயருக்கேற்ப நிலைபேற்று வாழ்வு பெற்று என்றும் வாழ்ந்திட முடியும். அவ்வாறு வாழ இறையருள் சித்திக்குமாக!*

**ஓடாது மாயை நாடாது நன்னெறி**
**ஊடாது இரு என்றீர் வாரீர்**
**வாடாது இரு என்றீர் வாரீர் – திருஅருட்பா**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது தருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

ஆண்டு சந்தா **ரூ.120**

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். 5 வருட சந்தா ரூ.600/- தொடர்புக்கு: **8012680865**

*www.vallalarmission.org*
*vallalartrust@gmail.com*
*www.facebook.com/vallalarmission*
*Vallalarmission. Cell no: +91 99427 76351*



## வடலூர் மாதப்பூசம்



**26.03.2018** – பங்குனி 12 – திங்கள்

**21.04.2018** – சித்திரை 08 – சனி
(வள்ளல் பெருமானார் அகவல் எழுதிய நாள்)

**22.04.2018** – சித்திரை 09 – ஞாயிறு

## திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலம்

**30.03.2018** – பங்குனி 16 – வெள்ளி
இரவு 07:26 – மறுநாள் இரவு 06:17 வரை

**29.04.2018** – சித்திரை 16 – ஞாயிறு
காலை 05:50 – மறுநாள் காலை 05:50 வரை



Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly March 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா



அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

**நாள்: 25.03.2018, ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

- **அகவல் பாராயணம்** - சன்மார்க்க அன்பர்கள்
- **சிறப்பு சத்சங்கம்** - சன்மார்க்க சாதுக்கள்
- **ஜோதி தியானம்**
- **திருவருட்பா இசைக் கச்சேரி**
- **ஜோதி வழிபாடு**

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

**அனைவரும் அருள் பெற வருக! வருக!!**

தொடர்புக்கு: **+91 75020 26565, +91 95977 19535**

திரு/திருமதி

Periodical Issue

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**